# ஜநவிநோதிநி.

இல. 4.] ஏப்பிரல்மீ 1879. [புஸ்த. X.

## ஒலிகாட்டிக்கருவி.

இப்போது ஐரோப்பாக்கண்டத்தில் புதிதாய் டெலெபூன் என்னும் ஒலிகாட்டிக்கருவி ஒன்று உண்டாயிருக்கிறது. அதன் விசித்திரச்செய்கைகளைப்பற்றி அங்கே அடிக்கடி உபந்நியாசம் செய்வதுமன்றியில் சமாசாரபத்திரிகைகளிலும் விசேஷமாய்ப் பிரசுரஞ் செய்துவருகிறார்கள். அது தெரியாத நமது தேசத்தார்க்கும் அந்த விசித்திரமான கருவியைச் செய்கிறவகை இப்படிப்பட்டதென்றும், அதன் பெருமை இப்படிப்பட்டதென்றும் ஒருவாறு தெரியக்காட்டுகிறோம்.

அநேகம் காததூரத்துக்கப்பால் இருப்பவர்கள்கூட ஒரே இடத்தில் உட்கார்ந்திருப்பவர்போலச் சுலபமாய்ப் பேசுவதற்கு உபயோகமானது இந்தக் கருவி. தூரதேசத்திலுள்ளவர்களுடைய பேச்சைக்கூட நாம் எளிதில் கேட்டுச் சந்தோஷிக்கும்படிச் செய்யத்தக்கதான இக்கருவியின் பெருமையானது, வெகு விசித்திரமாக வர்ணனைகள் செய்யவல்ல மகாகவிகள்கூடச் சற்றே நிதானித்து ஆலோசிக்கும்படி, அவ்வளவு அதிசயமாயிருக்கின்றது; உண்மையிலிருக்கிற புதுமை கட்டுக்கதைக்குக் கிடையாது. மின்தபால் கம்பியாலேகூட இந்தச் செய்கை ஒருவாறு முடியும்; அதாவது—அந்தத் தபால்கம்பிகூட வெகுதூரம் நம்முடைய சமாசாரங்களைக் கொண்டுபோம். ஆனால், கையைத் தூக்கினால் ஆம் என்பதற்குக் குறிப்பு, கையைச் சாய்த்தால் அல்லவென்பதற்குக் குறிப்பென்று சங்கேதஞ்செய்துகொண்டு இரண்டு பிள்ளைகள் வெகுதூரத்தில் நின்றுபேசினால் எப்படியோ அப்படித்தான் தந்திக்கம்பியும்; ஒரு ஸ்தானத்தில் சாவியை அளவிட்டு அசைத்தால் அது மற்றோரிடத்தில் ஊசியை ஆடச்செய்து, ஊசி வலப்புறத்தில் அசைந்தால் இன்ன எழுத்தென்றும் இடப்புறத்தில் அசைந்தால் இன்ன எழுத்தென்றும் தந்திக்கம்பி எழுத்துகளைக் குறிப்பாய்க் காட்டுகிறது; பின்பு அந்த எழுத்துகளைச் சொற்

ளாக்கி அச்சொற்களை வாக்கியமாக்குகிறார்கள். இப்படிப்பட்ட தந்தித்தபால் வியாபாரம் நடக்கச் சிறந்த கருவிகளும் வேண்டும். தந்தித்தபாலென்பது யாவரும்பார்த்து அதிசயிக்கத்தக்க கருவிகளுள் ஒன்றாயினும், நமது தினச்செய்கைகளுள் ஒன்றாகப் பாவிக்கும்படி அவ்வளவு பழக்கமாய்ப் போனதனால், அதன் பெருமை அவ்வளவாய் இப்போது நமது புத்திக்குத் தோன்றுவதில்லை. இப்போது நாம் சொல்லப்போகிற ஒலிகாட்டிக்கருவியோ அதைவிட வெகு விசித்திரமானது; கையாள்வதற்கோ வெகு லேசான கருவி; பேசத்தெரிந்தவனெவனும் அதை உபயோகிக்கலாம். இங்கே நாம் பேசுகிற பேச்சுகளெல்லாம் மற்றோரிடத்தில் அப்படியே போய்க் கேட்கும். ஊசிகள் குறித்துக்காட்டுகிற வரிவடிவமாயல்ல; நாம் பேசியறிவிக்கின்ற ஒலிவடிவமாகவே. இருவர் கைகோத்துக்கொண்டு பேசித் தெரிந்துகொள்ளவேண்டிய சொற்கள் அநேகங்காதவழி போம்படி ஏற்பட்டதென்றால், சாஸ்திரம்பெற்ற பெரும்பேறு இதைவிட வேறென்ன?

இப்படி விசித்திரமான வகையாய்ப் பேச்சு எப்படி வெகுதூரம் கொண்டுபோகப்படுகிறதென்று விசாரிப்பதற்குமுன்னமே, முதல்முதல் நமது வாயினின்றும் பேச்சு எப்படி உண்டாகிறதென்பதைப்பற்றிச் சற்று விசாரிப்போம். இந்தப் பேசுந்திறமையைக் கடவுள் கொடுத்திருப்பதனாலல்லவோ மன்னுயிர்களுக்கு மற்ற ஜீவன்களைவிட ஒரு ஏற்றமுண்டாயிருப்பது. இரண்டு கம்பங்களுக்கு நடுவே ஒரு தந்தியை இழுத்துக் கட்டிவிட்டு அதை விரலால் தட்டினால், அப்போது அதினின்றும் ஒரு மதுரமான சத்தம் உண்டாகிறதல்லவா? தும்புரு வீணை முதலிய கருவிகளில் நாதமுண்டாவதும் இப்படியே. அதன் கம்பியை நாம் அப்படி இழுத்துவிடுவதனால் சத்தம் ஏன் உண்டாகவேண்டுமென்கிறீர்களோ? நாம் அந்தக் கம்பியைத் தட்டும்போது அது சாசரவென்று முன்னும் பின்னும் ஆடி, அங்குள்ள ஆகாயத்தைப் படபடவென்று அடிப்பதனால் அந்த நாதம் உண்டாகிறது. அப்படி உண்டாகிற சத்தங்களைத்தான் நாம் சங்கீதமென்கிறோம்.

உலகத்திலுள்ள பலவிதமான சங்கீதக்கருவிகளுள்ளும் மிகவும் திருத்தமான கருவி மானிடர்களுடைய வாக்கு. மற்றச் சங்கீதக்கருவிகளைப்போலவே இந்த வாக்கும் சங்கீதம் உண்டாக்குவது மேற்சொல்லியவிதமான ஆட்டத்தினாலேதான். வீணைமுதலியவற்றில் ஆடுகிற கம்பிபோல நமது வாக்கில் ஆடத்தக்க கருவி என்ன இருக்கிறதென்கிறீர்களோ? சுவாசக்குழாய்க்குள் நன்றாய் இறுக்கிக்கட்டிய தந்திக்கம்பிபோன்ற ஒருவிதக் கருவியுண்டு; அது நாம் பேசத்தொடங்கும்போது, நமது முயற்சியால் உள்ளிருந்து எழுகின்ற வாயுவினால், வீணைக்கம்பி ஆடுவதுபோல ஆட்டப்படுகின்றது; அதனாலேதான் நமது வாக்கினின்றும் ஒலி உண்டா

கின்றது. உதடு நாக்கு முதலிய கருவிகளின் துணையால் அந்த ஒலி வெவ்வேறெழுத்துவடிவமாக வெளிப்படுகின்றது.

இவ்விதமாக நமது வாக்கினின்றும் உண்டாகிற சத்தங்கள் ஒலிகாட்டிக்கருவியால் வெகுதூரத்திற்கு எப்படிக் கொண்டுபோகப்படுகின்றனவென்கிறீர்களோ, அதைத்தான் இப்போது சொல்ல ஆரம்பிக்கிறோம். குழந்தைகள் முதலில் நகர்ந்து தவழ்ந்து நின்று நடந்து பின்பு ஓட ஆரம்பிப்பதுபோல், நாமும் தெரியாத விஷயம் எதையும் கொஞ்சங்கொஞ்சமாய்ப் படிப்படியாகச் சொன்னாலே யாவர்மனதிலும் நன்றாய்ப் பதியும்; ஒன்றின்பின் ஒன்றாக விஷயங்களையும் சுலபமாய் அறிந்துகொண்டுபோகலாம்.

தெருக்களில் பிள்ளைகள் வைத்துக்கொண்டு விளையாடுகிற கருவியைப்பற்றி முதலில் பேசுவோம். உரப்புக் காகிதத்தாலாவது தகரத்தாலாவது இரண்டு குழாய்செய்து, அக்குழாய்களின் ஒருபுறத்து வாயைமட்டும் வாத்தியங்களுக்கு உபயோகிக்கிற தோலினால் மூடி, வெகு நீளமான கயிறு ஒன்றை எடுத்து அதின் இரண்டு முனையையும் இரண்டு குழாய்களின் தோலிலும் முடிந்து, பின்பு அந்தக் கயிற்றை இழுத்துப்பிடித்துக்கொண்டு ஒரு குழாயில் ஒருவர் பேசினால், அந்தப்பேச்சு அக்கயிற்றின்வழியாய்ப் போய் மற்றொரு குழாயைக் காதிலே வைத்துக்கொண்டிருப்பவனுக்கு நன்றாய்க் கேட்கும். அவன் பேசுகிற பேச்சு அண்டையில் இருப்பவர்களுக்குக் கேளாதாயினும், வெகுதூரத்தில் அந்தக் குழாயைப் பிடித்துக்கொண்டிருப்பவனுக்கு வெகு நன்றாய்க் கேட்கும். ஆனால் அந்தக் கயிற்றைமட்டும் நன்றாய் இழுத்துப் பிடித்துக்கொண்டிருக்கவேண்டும்.

இப்படி வெகுதூரம் சத்தம்கேட்பதற்குக் காரணத்தைத் தெரிந்துகொள்வது கடினமானதன்று. முதலில் பேசுகிறவனுடைய கண்டநாளம் ஆட, உடனே அவன் வாயண்டையிலுள்ள குழாய்த்தோல் நடுங்குகிறது. அது நடுங்கினவுடனே கயிறு நடுங்க, அக்கயிறு இழுத்துப் பிடிக்கப்பட்டிருப்பதனால் அதன்மூலமாய் மறுபுறத்துக்குழாயின் தோலசைய, அதுபற்றி அதை வைத்துக்கொண்டிருப்பவனுடைய காதிலுள்ள ஆகாயம் அசைந்து அந்தப் பேச்சு நன்றாய்க் கேட்கின்றது.

இப்படி விளையாட்டுக்காகச் செய்கிற ஒலிகாட்டிக்கருவியால் சத்தம் வெகுதூரத்திற்குப் போகமாட்டாது. ஒலிகாட்டிக்கருவியைச் செய்கிறபடிச் செய்தால் 30,40 காதங்கூடப் பேச்சுகள் போகமாட்டும். முப்பது நாற்பது காதமென்றால் என்னவென்று நினைக்கிறீர்கள்! இச்சென்னையில் ஒருவனும் பம்பாயில் ஒருவனுமாய் உட்கார்ந்து இரண்டு நேசர்கள் கைகோத்துக்கொண்டிருப்பவர்போல விநோதமாய்ப் பேசுவதென்றால் இதைவிட அதிசயம்

வேறென்ன! விளையாட்டுக்காகச் செய்கிற கருவியில் ஒரு தோலைக் கட்டுவதுபோல இதில் ஒரு உலோகத்தகட்டைக் கட்டவேண்டும்.

இப்படிப் பேச்சுக்கேட்கிறதா இல்லையாவென்று சந்தேகமானால், அதேவிதமாய் இரண்டு குழாய்செய்து கயிறுகட்டிப்பேசிப் பரீக்ஷைபார்க்கலாம். ஆனால் அப்படி நாம் பேசுவதனால் பேச்சு கொஞ்சந்தூரந்தான் கேட்கும். வெகுதூரம்வரையில் அந்தக் கம்பி சரியாய் ஆடிச் சத்தத்தைக் கொண்டுபோகமாட்டாது. அப்படி அதிகதூரம் போகவேண்டுமென்றால், அவ்வளவுதூரம்வரையில் சென்று எதிர்ப்புறத்திலுள்ள தகட்டை ஆட்டுவிக்கும்படியான கருவி உலகத்தில் என்ன இருக்கிறதென்று நாம் ஆய்ந்துபார்க்க வேண்டும்.

அப்படிப் பரிசோதித்துப்பார்ப்போமானால் காந்தம் என்கிற விசித்திரமான பொருள்தான் அப்படிப்பட்டதென்று நமக்கு நன்றாய்த் தோன்றும். அந்தக் காந்தந்தான் ஒலிகாட்டிக்கருவிக்கு முக்கியமானது. காந்தத்திற்கு லோகத்தை இழுப்பதைவிட வேறு வல்லமையுண்டாவென்கிறீர்களோ? பலவித விசித்திர சக்திகள் உண்டு; தன்னைச் சுற்றியிருக்கிற செப்புக்கம்பிகளில் மின்சாரத்தை உண்டாக்கும்படியான வல்லமை அவற்றுள் ஒன்று. மேலும் அப்படிப்பட்ட காந்தத்தின்முன் ஒரு இருப்பக்கம்பி அசைந்தால், அதற்கெதிரில் காந்தத்தின்மேல் சுற்றப்பட்ட தந்தியிலுள்ள மின்சாரம் அசைக்கப்படுகின்றது. அது அசையக் காந்தத்தின் கவர்ச்சித்திறம் அசைந்து இருப்பக்கம்பியின் ஆட்டத்திற்குத்தக்கபடி மாறுகின்றது.

இப்படிப்பட்ட சிறந்த கருவியான காந்தத்தைக்கொண்டு பல பண்டிதர்கள் பலவிதமான யந்திரங்கள் செய்திருக்கிறார்கள். பேல் என்கிற ஒரு பண்டிதர் ஒருவிதமாய் ஒலிகாட்டியந்திரம் செய்து பரிசோதனைசெய்தார். அவர் ஏதோ ஒரு காரியத்துக்காகத் தன் படிப்பை விருத்திசெய்துகொண்டிருக்கையில், கடைசியில் தற்செயலாய் இந்த ஒலிகாட்டியந்திரத்தைக் கண்டறியும்படியாயிற்று. இப்படிச் சாஸ்திரபரிசோதனைகள் செய்யும்போது முதலில் ஆரம்பித்த வழியைவிட்டு ஒரு கிளைவழியிற்சென்று அங்கே ஒரு பெருத்த நிதியைக்கண்டு முதலிற்சென்ற மார்க்கத்தை மறந்துபோவது வழக்கமே. பெல் என்பவர் முதலில் உயிரெழுத்துகளின் சத்தம் எப்படி உண்டாகிறதென்று விசாரிக்கத்தொடங்கி அது காரணமாகத் தந்திக்கம்பிகளின் வழியாய்ப் பேசுகிற பேச்சுகூடக் கேட்கக்கூடுமென்று பரிசோதிக்கலானார். பின்பு மின்சாரங்களைப் பரிசோதிக்க ஆரம்பித்து அதைக்கொண்டு அநேகங் கருவிகள் செய்தார். அந்த யந்திரங்களின் வரலாற்றையெல்லாம் நாம் இங்கே சொல்லப்புகின், சங்கதி வளருவதுமாத்திரமேயன்றி, விஷயங்கடினமாதலால் சுலபத்தில் போதமுமாகமாட்டாது. முத

வில் பெல் என்பவர் ஒலிகாட்டியந்திரம் இரண்டு மூன்று விதமாய்ச் செய்துபார்த்து, அவையெல்லாம் அதிகச் செலவுசெய்து முடிக்கத் தக்கவையென்று கண்டு அவற்றைவிட்டுக் கடைசியாய்ச் சுலபமான யந்திரமொன்று செய்துமுடித்தார்.

இச்சஞ்சிகையுடன் வருகிறபடத்தில் விளங்குவது அந்த ஒலிகாட்டிக்கருவியே. இப்படிப்பட்ட ஒலிகாட்டிக்கருவியை அதற்குமுன் ஒருவரும் செய்ததில்லை. அவர் காதிலும் வாயிலும் வைத்துக்கொண்டிருக்கிற இரண்டு கருவிகளின் உட்புறம் ஒரு பெரிய நூல் கண்டின் நடுவே ஒரு ஆணியைக் கோத்தால் எப்படியோ அப்படியிருக்கின்றது. அங்கே நூலுக்குப் பதிலாக இந்தக் கருவியில் பட்டினால் மூடப்பட்ட செப்புக்கம்பியும், ஆணிக்குப்பதிலாகக் காந்தக்கம்பியுமாம். அந்தக் கருவியின் மொத்தவடிவத்தைப்பார்த்தால் ஒரு நச்சுக்குழாய் வடிவமாகவும் அதில் பேசுகிற முனை ஒரு இருப்பதட்டுபோலவும் இருக்கும். அந்தத் தட்டின் கீழேதான் காந்தத்தின் மேல்நுனி இருக்கிறது. அதன்மேல் பட்டினால் மூடப்பட்ட கம்பி சுற்றப்பட்டிருக்கிறது. இப்படிச் செய்த குழாயின் நுனியில் பித்தளைமறை இரண்டுவைத்து, வெகுதூரம் போம்படி அதில் கம்பிகள் கட்டப்பட்டிருக்கின்றன.

நாம் முதலிற்சொல்லிய விளையாட்டுக்கருவியில் சத்தமே நேராய்ப் போகின்றது; இப்போது சொல்லிய பெல் என்பவருடைய கருவியிலோ, சொற்களின் அலைகள் மின்சாரத்தின் அலையாகமாறி வெகுதூரம்போய், அங்கே வைத்திருக்கிற கேட்குங்கருவியில் மறுபடி சத்தமாக மாற்றப்படுகின்றது. ஒரு தந்திக்குள்ளாவது அதன் பக்கத்திலாவது காந்தமிருக்குமானால், அது அந்தத் தந்தியில் மின்சாரத்தை உண்டுபண்ணுமென்று பாரடே என்பவர் கண்டுபிடித்த விசேஷத்தை நினைத்து நாம் இத்தருணத்தில் நன்றிபாராட்டவேண்டும். ஏனெனில் அந்த நுட்பத்தாலேதான் முக்கியமாய் இந்தக் கருவி அமைந்தது.

இந்தப் படத்தில் ஒருவர் பேசுவதற்காக ஒரு கருவியை வாயிலும், அந்தப் பேச்சுக்குப் பதில் உத்தரத்தில் ஒரு வார்த்தைகூட விட்டுப்போகாமல் கேட்பதற்காகச் சித்தமாய் மற்றொரு கருவியைக் காதிலும் வைத்துக்கொண்டிருக்கிறார் பாருங்கள். கேட்கிற கருவிமட்டும் காதோடு நன்றாய்ப் பொருந்திவைக்கப்படவேண்டும். இல்லாவிட்டால் சத்தம் வெகு நுட்பமாகையால் கேளாமற்போம். ஓரிடத்தில் ஒரு பெரிய உபந்நியாசம்செய்தால் அது மற்றோரிடத்தில் ஒலிகாட்டிக் கருவியின்வழியாய்ப் பலபேர்க்குக் கேட்குமென்று இப்படிப் பல பொய்க்கதைகளும் கட்டிச்சொல்ல ஆரம்பித்திருக்கிறார்கள்; அவையெல்லாம் நம்பத்தக்கவையல்ல. இந்தக் கருவியின் வழியாய் வெகுநுட்பமான நாதங்கூடக் கொண்டு

போகப்படுமென்றாலும், கேட்பவன் மிகவும் அடக்கமானவிடத்தி லிருந்தாலொழிய அவனுக்குக் கேட்பது வருத்தம்.

மறுபடியும் சற்றே படத்தைப்பாருங்கள். ஒலிகாட்டிக்கருவி யினின்றும் வருகிற தந்திகள் நடுவே ஒரு பெட்டியில் பூட்டப்பட் டிருக்கின்றனவல்லவா? அந்தப் பெட்டியில் B என்று குறியிட் டிருக்கும் பிடியால் திருப்பக்கூடிய சுழல்யந்திரமொன்று உண்டு. அது மற்றொரு ஸ்டேஷனிலிருப்பவனுக்கு எச்சரிக்கையாக முன் னதாய் மணியடிக்கின்றது. ரெயில்மார்க்கத்தில் வண்டி வேறு வேறு கம்பிகளில் மாறுவதற்காகக் கம்பிகளைச் சேர்க்கவும் விலக்க வும் வைத்திருக்கிற கருவிபோல் இங்கே அந்தப் பெட்டியின் முன் புறத்தில் ஒரு பிடி இருக்கிறது; அந்தப் பிடி S என்கிற குறியின் அடிப்புறத்திற்கு மேலேவந்தால் மணி அடிக்க ஆரம்பிக்கின்றது; T என்கிற குறிக்குமேல் வந்தால் மணி மூடப்படுகிறது; அப் போது அந்தத் தந்தி நீளவே போய்விடும். இப்படி ஏற்படுத்து வதனால் செய்தி போவதும் வருவதும் ஒரே கம்பியாலேயே நிறை வேறுகிறது. கொஞ்சம்தூரத்துக்குப் பேச்சுபோகவேண்டுமென் றால் அப்போது இவ்வளவு வருத்தமில்லாமல் தனித்தனி தந்தி உபயோகிப்பதே நலம். மின்தபால் ஏற்படுத்தும்போதுகூட முத லில் போகவொன்று வரவொன்றாய் இரண்டு தந்திகளை உபயோகித்து வந்தார்கள். பின்பு நுட்பங்கள் விசேஷமாய்க் கண்டறியப்பட் டதனால் ஒரே தந்தியாலேயே போக்குவரவு நடந்துவருகிறது.

## கூட்டுக்குடியிருந்த சூதனும் மூடனும்.

ஒருகால் ஒரு சூதனும் மூடனும் கூட்டுக்குடியிருந்து வாழ்வ தாக ஒப்பந்தஞ்செய்துகொண்டார்கள். அவர்களுடைய கதையைக் கேட்டால் மூடத்தனத்தின் பெருமை இவ்வளவென்று தெளிவாய்த் தெரியவரும். தனக்குக் கூட்டாளியாய் மூடன் ஒருவன் அகப் படவே, இது நமக்கு நல்லகாலந்தானென்று சூதன் மிகவும் கொக் கரித்தான். நமக்குச் சொந்தமாய் நல்லபுத்தியில்லாமற்போனாலும் வேண்டும்போது உதவிசெய்யவாவது இப்படிப்பட்ட வல்லவன் நமக்குக் கூட்டாளியாக நேரிட்டானேயென்று மூடனும் தன் அதிர்ஷ்டத்தைப்பற்றிப் பெருமையாய் நினைத்தான்.

அவர்களுள் ஒருவர்க்காவது வேலைசெய்ய விருப்பமில்லையா தலால், அப்போது தம் இருவர்கையிலும் இருந்தபொருளை வைத் துக்கொண்டு அது ஆகுமளவும் சாப்பிட்டுக்கொண்டிருக்கும்படி யாகவும், அந்த விஷயத்தில் யாதொரு சச்சரவும் உண்டாகாத படி முதலில் மூடனுடைய பொருளையும், அது செலவழிந்தபிறகு சூதனுடைய பொருளையும் செலவுசெய்யும்படியாகவும் சூதன்

ஒரு ஏற்பாடு செய்தான். அந்தப்படியே மூடனுடைய கைப் பொருளைச் செலவுசெய்துகொண்டு அது ஆகுமளவும் இருவரும் ஒத்து மிகவும் நேசமாய்க் கொஞ்சகாலம் வாழ்ந்துகொண்டிருந்தார்கள். சுகமாய்க் காலங்கழிக்க வழியிருந்தால் சச்சரவுக்கிடமேது!

மூடனுடைய பொருள்களெல்லாம் செலவாய்ப்போனவுடனே சூதன் ஒரு வெறும்பையைக் கையிலெடுத்துக்கொண்டு முகம் வாட வாட மூடனண்டைபோய், தோழா! இப்போது நாம் என்ன செய்கிறது? இந்தப் பை நிரம்பப் பணம்போட்டு நான் ஒரு கொஞ்சிச்செடியின்கீழே புதைத்துவைத்திருந்தேன். யாரோ ஒரு திருடன் அதைக்கண்டு பணத்தையெல்லாம் எடுத்துக்கொண்டு பையைமாத்திரம் போட்டுப்போய்விட்டான். நீ வைத்திருந்ததைப் பார்க்க நான் வைத்திருந்த பணம் இரட்டிப்புண்டு. அவ்வளவும் போய்விட்டதே! நான் எப்படி என் பங்குக்குப் பணங்கொடுக்கிறது? எனக்குச் சொல்ல பயமாயிருக்கிறது—நம்முடைய கட்டுறவு இவ்வளவோடு முடியவேண்டுவதுதான் என்றான்.

'வெள்ளைக்கில்லை கள்ளச்சிந்தை' என்கிறபடி மூடன் சிறிதும் கபடம் தெரியாதவனாதலால் அவன் சொன்னது உண்மைதானென்று நம்பி, சுகத்தைமட்டும் நாம் இருவரும் பங்கிட்டுக்கொண்டோமே, துக்கம் வந்தால்மட்டும் ஓடிப்போகலாமா? ஆனால் ஜீவனம்செய்வதற்குக் கையில் ஒன்றுமில்லையே; வேறென்னசெய்கிறது; எங்கேயாவது வேலை தேடவேண்டுவதுதான் என்று சொல்ல, அப்போது இருவர்க்கும் அடியில் வருமாறு ஒரு சம்பாஷணை உண்டாயிற்று.

சூதன்: நீ சொல்வது நல்ல யுக்தியாயிருக்கிறது; நல்லது, நீ என்னவேலைசெய்வாய்?

மூடன்: நான் கொஞ்சம்வேலைதான் செய்வேன், கொஞ்சமாயினும் செய்தமட்டும் நன்றாயிருக்கும்.

சூதன்: நானும் அப்படித்தான் செய்வேன்; நல்லது, உனக்கு என்னவேலை செய்யத்தெரியும்? புலங்களை உழுது பயிரிடுவாயா, அல்லது மாடுமேய்ப்பாயா, அல்லது தோட்டப்பயிர் செய்வாயா? உன்னால் என்னவேலையாகும்?

மூடன்: வேளாளத்தொழில் என்னாலாகாது ஐயா.

சூதன்: எனக்கும் அப்படித்தானப்பா, உனக்குக் கைத்தொழிலில் நல்ல தேர்ச்சியுண்டெனத் தோன்றுகிறது; கம்மாளவேலை, கொல்லத்துவேலை, தையல்வேலை, சக்கிலிவேலை இப்படிப்பட்டவைகளுள் ஏதாவதொன்று தெரியுமா?

மூடன்: அந்த வேலைகளை வாலிபத்தில் கற்றுக்கொண்டிருந்தால் நான் இப்போது வல்லவனாகவேயிருப்பேன். நான் ஒருவரிடத்திலும் அமர்ந்திருந்து அவற்றைக் கற்றுக்கொண்டதில்லை.

சூதன்: இந்தவிஷயத்திலும் நீ என்னைப்போலவேயிருக்கிறாயே; புத்திசாதுரியம் உனக்கு அதிகமாயிருக்கும்போலக் காண்கிறது; சித்திரம் எழுதுவாயா? கீதவாத்தியங்கள் வாசிப்பாயா?

மூடன்: இப்படிப்பட்ட வியாபாரங்களில் நான் முன்னதாய் அப்பியாசம் பண்ணவில்லை; அதனால் ஒன்றுந்தெரியாது.

சூதன்: நானும் அப்படித்தான். நமக்கு ஒன்றும் தெரியாதாதலால் நாமே ஒருவேலையைத் தேடிப்போவதற்கில்லை; வேலை தானே நம்மைத் தேடிவருமளவும் நாம் நெடுகப்போய்க்கொண்டிருப்பது நல்லதென்று எனக்குத் தோன்றுகிறதென்றான்.

அப்படியே அந்தத் தோழர்களிருவரும்போகப் புறப்பட்டார்கள். வெகுதூரம் போனபிறகு ஒரு மலையடிவாரத்தில் வர்த்தகனொருவன் உடைந்துபோன வண்டியொன்றை வைத்துக்கொண்டு உட்காந்திருக்கக்கண்டார்கள். அவன் இவர்களைப்பார்த்து, நீங்கள் வெகு பலசாலிகளாய்த் தோன்றுகிறீர்கள்; இப்பெட்டியை இம்மலையின் மறுபுறத்திலிருக்கிற சத்திரங்கொண்டு சேர்ப்பீர்களானால் உங்களுக்கு இரண்டு மோகரா கொடுக்கிறேனென்றான்.

அதைக்கேட்டு மூடனும் சூதனும், இப்போது வேலை நம்மைத் தேடிவந்தது பார்த்தாயா என்று சொல்லிச் சந்தோஷித்து அதற்குச் சம்மதித்து அந்தப் பெட்டியைத் தோளிலே தூக்கிவைத்துக்கொண்டார்கள். வைத்துக்கொண்டதும் சூதன் மூடனைப்பார்த்து, அப்பா, கூட்டுவியாபாரங்களிலெல்லாம் முறைபோட்டுக்கொண்டு வேலை செய்வதே நலம். அதிலும் சுலபமாக மாற்றிக்கொள்வது மிகவும் நலமானது. மலைமேலேறுவது கடினமாதலால் ஏறும்போது நான் முன்னேபோகிறேன்; இறங்குவது சுலபமாதலால் இறங்கும்போது நீ முன்னேபோகலாமென்றான்.

எப்போதும் தாழ்வான பக்கத்திலேயே பளுவு அதிகமாய்த் தாங்குமென்பது தெரியாமல் மூடன், அவன் தனக்கு அனுகூலமாகவே சொல்லுகிறானென்று எண்ணி, அப்படியே அந்த வழிமுழுதும் தூக்கிக்கொண்டுபோனான். அங்கிருந்த சத்திரம்போய்ச்சேர்ந்ததும் வர்த்தகன் ஒவ்வொருவனுக்கும் ஒவ்வொரு மோகரா கொடுத்தான். அவ்விடம் மிகவும் சவுக்கியமாயிருந்ததனால் அவர்கள் அந்தப் பொருள் செலவழிகிறவரையில் அங்கேயே நன்றாய்த் தின்றுகொண்டிருந்தார்கள். கொஞ்சகாலம் கடன்வாங்கியும் தின்றார்கள். அதுவும் செலவழிந்துபோகவே ஒருநாள் காலையில் அவர்கள் ஒருவர்க்கும் தெரியாமல், தங்கள் கடனையும் தீர்க்காமல் எழுந்துபோய்விட்டார்கள்.

அதன்பிறகு அவர்கள் வேலையுமில்லாமல் உணவுமில்லாமல் வெகுகாலம் அல்லாடிக்கொண்டிருந்தார்கள். அப்படித் திரிந்துகொண்டுபோகையில் ஒருநாள் பாதையோரத்தில் கல்லொட்டன்

ஒருவன் கல் உடைத்துக்கொண்டிருக்கக்கண்டார்கள். அந்த ஒட்டன் இவர்களைப்பார்த்து, தோழர்களே! நீங்கள் மிகவும் பசித்து வந்திருப்பதுபோலக் காண்கிறது; எனக்கோ கொஞ்சம்காரியமாய் ஓரிடத்திற்குப் போகவேண்டியிருக்கிறது; இந்தக் கற்களை உடைக்க உங்களுக்குச் சம்மதமானால், இந்தப் பல்லாயிலிருக்கிற சாப்பாட்டை நான் இங்கேயே வைத்துவிட்டுப்போகிறேன்; நீங்கள் வேலைசெய்தானபிறகு இதைத் தின்றுவிட்டு இந்தப் பல்லாவையும் அகப்பையையும இங்கேயே வைத்துப்போங்கள்; நான் திரும்பிவரும்போது கண்டெடுத்துக்கொண்டுபோகிறேன் என்றுசொல்ல, அதற்கு அவர்கள் சம்மதிக்கவே அப்படியே வைத்துவிட்டுப்போனான்.

பின்பு சூதன், நாம் முன்னதாய்த் தின்போமானால் தேகத்தில் வலிமையுண்டாகும், நன்றாய் வேலைசெய்யலாம்; இங்கே ஒரே அகப்பை இருப்பதனால் ஒவ்வொருவராகவே புசிக்கவேண்டும். பங்கிட்டுப் புசிப்பதற்குச் சமானம் வேறொன்றுமில்லை. நாம் கடைசியில் மலையினின்றும் இறங்கும்போது நீ முன்னே போனாயல்லவா; ஆதலால் நான் இப்போது முன்னே புசிக்கிறேன்; பின்பு நான் எத்தனை அகப்பை தின்கிறேனோ அத்தனை நீயும் தின்னு, பின்பு நான் தின்கிறேன்; இப்படியே பல்லாயிலுள்ளதெல்லாம் ஆகுமளவும் செய்வோமென்றான்.

மூடன் இது வெகு நியாயமாயிருக்கிறதென்றுசொல்லச் சூதன் முதலில் புசிக்க ஆரம்பித்தான். அவன் அதில் மூன்றிலொரு பங்கு தின்றுநிறுத்த, அவன் தின்றது இத்தனை அகப்பை என்று கணக்கிட்டுக்கொண்டிருந்த மூடன் பின்பு தானும் அத்தனை தின்றான்; சூதன் மறுபடியும் தான் தின்ன ஆரம்பித்துப் பல்லாயை உருட்டிவிட்டான். இப்படியாகச் சூதன் மூடனைவிட இரட்டிப்பு தின்றான். ஆயினும் இந்தச் சூது அவனுக்குத் தெரியவில்லை.

பின்பு அவர்கள் வேலைசெய்யத் தொடங்கினார்கள். அப்போது சூதன், இங்கே ஒரே ஒரு சுத்தியிருப்பதனால், சாப்பாடு சாப்பிட்டபடியே மாற்றுக்கட்டாய் வேலைசெய்யவேண்டும். போன தடவை நான் முதலில் ஆரம்பித்தேனாதலால், இப்போது நீ முன்னே ஆரம்பிக்கலாம். நீ கொஞ்சநேரம் வேலைசெய்தானபிறகு, உன் கைச்சுத்தியை வாங்கிக்கொண்டு நான் உடைக்கிறேன்; அப்போது நீ சும்மா இருந்து நான் நின்றதும் நீ மறுபடியும் துவக்கு; இப்படியே இந்தக் குப்பல் ஆகிறவரையில் செய்வோமென்றான்.

உன்னைப்போல் இவ்வளவு நியாயமாய் நடப்பவர் ஒருவரையும் நான் பார்க்கவில்லையென்றுசொல்லி மூடன் சுத்தியைக் கையில் எடுத்துக்கொண்டு கல்லை உடைக்க ஆரம்பித்தான்.

அந்தக் குப்பலில் மூன்றிலொருபங்கு ஆகிறவரையில் பார்த்துக்கொண்டிருந்து அவ்வளவானதும் சூதன் தான் அவ்வளவு

வேலைசெய்துவிட்டுச் சுத்தியை மூடன்கையிற்கொடுக்க, அவன் அந்தக் குப்பயில் மிருந்ததை உடைத்துப்போட்டான். இப்படி மூடன் சூதனைவிட இரட்டிப்புவேலை செய்தானாயினும் அதன் வழி தெரியாமல தான்செய்தது சரிதானென்று நினைத்தான்.

இப்படி அவர்கள் அந்த வேலையைச் செய்துவிட்டு அப்புறம் போகப் புறப்படும்போது சூதன் அங்கிருந்த பல்லாயையும் அகப்பையையும் கையிலெடுத்துக்கொண்டு புறப்படக்கண்டு மூடன், தோழனே, நீ இப்படிப்பட்ட காரியம் செய்வது எனக்கு மிகவும் விசனமாயிருக்கிறது என்று சொன்னான். அதற்கு அந்தத் திருடன், இதொரு திருடா? இதெவ்வளவு இருக்கும்? புதிதாய் வாங்கினபோதே இரண்டணா இராதே என, மூடன், நான் அதற்காகச் சொல்லவில்லையே; இது சொந்தக்காரனுக்குத் தெரிந்தால் சங்கடமல்லவா எனக்கேட்டு, அதற்காகவா நீ சிந்தைப்படுகிறாய்? எவனோ வழிப்போக்கன் ஒருவன் எடுத்துக்கொண்டுபோய் விட்டதாகவே அவன் நினைப்பான்; நாம் இவற்றை இங்கேயே போட்டுவிட்டுப்போனாலுங்கூட அப்படித்தான் நடக்கும். இதை எடுத்ததற்காக நீ என்னவோ தவித்துப்போகிறாயே; இது உனக்கு வேண்டாம்; நானே வைத்துக்கொள்கிறேன் என்றுசொல்லி அதைத்தானே எடுத்துக்கொண்டான்.

அங்கிருந்து புறப்பட்டுப்போகையில் ஓரிடத்தில் ஒரு குடியானவன் கம்பங்கொல்லையில் ஆயாலோட்டிக்கொண்டிருக்கக்கண்டார்கள். அவன் இவர்களைப்பார்த்து, நீங்கள் எனக்குப் பதிலாய் இங்கிருந்து பொழுதுபோமளவும் ஆயாலோட்டுவீர்களானால், உங்களுக்கு ராத்திரி சோறும்போட்டுப் படுக்க இடமும் தருகிறேனென்றுசொல்ல, அவர்கள் அப்படியே ஒப்புக்கொண்டார்கள். பின்பு சூதன் மூடனைப்பார்த்து, நேசனே, நான் இப்புலத்திற்கு வெளியே போய்நின்று அங்கிருந்து வருகிற பறவைகளையெல்லாம் அப்படியே துரத்திவிடுகிறேன்; நீ இங்கேயே நின்று இரண்டொரு பறவை தப்பிவருவதை ஓட்டிக்கொண்டிரு என்று சொன்னான். நடுக்கொல்லையிலிருந்து மூடன், ஆ! ஈ! என்று தொண்டை கம்மும்படிக் கூவிக்கொண்டிருக்கையில், சூதன் வேலிக்கு அப்புறமாய்ப்போய் ஒரு மரத்துநிழலில் படுத்துத் தூங்கினான்.

இராத்திரி அவர்கள் போய்ச் சாப்பாட்டுக்கு உட்கார்ந்தபோது மூடன் சூதனைப்பார்த்து, என் அருமைத்தோழனே! ஆயாலோட்டுவது மிகவும் வருத்தமப்பா; ஆடுமேய்ப்பதானால் சுலபம். பகலெல்லாம் ஆடுகள் மலையோரத்திலேயே மடங்கிக்கிடக்கும். ஆட்டைப் பறவையொன்றும் திருடிக்கொண்டு போகமாட்டாது; நாம வீணாய் இப்படித் தொண்டை கம்மக் கூவவேண்டுவதில்லை; ஆதலால் அந்த வேலையே கொடுக்கும்படிக் குடியானவனைக் கேட்

பது நலமென்று என் புத்திக்குத் தோன்றுகிறதென, சூதன் எனக்கும் அதுதான் இஷ்டமென்றான்.

மறுநாள் காலையில் அவ்விரண்டு செசர்களும் அப்படியே ஆட்டு மந்தையை ஓட்டிக்கொண்டு கொல்லைவெளிக்குப் போனார்கள். ஆடுகளெல்லாம் அசைபோட்டுக்கொண்டு ஓரிடத்தில் மடங்கின; நாயும் நாவைத் தொங்கவிட்டுக்கொண்டு படுத்தது. அந்தத் தோழர்கள் இருவரும் அவற்றின்பின்னால் மூஞ்சியை மூடிக்கொண்டு விழுந்துகிடந்தார்கள்.

அவர்கள் பொழுதுபடுமளவும் மூடின மூஞ்சியைத் திறக்க வேயில்லை. சூரியன் மறைந்ததும் கண்ணைத் திறந்துபார்த்தார்கள். ஒரு ஆடுகூட இல்லாமல் எல்லாம் எங்கேயோ போய்விட்டன. நாயும் அவற்றின்பின்னேயே போய்விட்டது.

அதுகண்டு சூதன், இப்போது நாம் செய்யவேண்டுவதென்ன? இரண்டுபேரும் இரண்டுவழியாய்ப் போய் அவற்றைத் தேடிப் பார்த்துக்கொண்டு கடைசியாய் இங்கேயே வந்துகூடுவோம் என, அதற்குச் சம்மதித்து இருவரும் இரண்டுவழியாய்ப் போனார்கள். சூதன்மாத்திரம் எங்கும் தேடப்போகவில்லை; மூடன் தலைமறையுமளவும் தானும் தேடப்போவதுபோலக்காட்டி, அவன் மறைந்ததும் திரும்பிவந்து அங்கேயே உட்காந்துகொண்டான்.

சிறிதுநேரத்தில் நாய் அந்த ஆடுகளையெல்லாம் ஒன்றுகூட விடாமல் பத்திரமாய் அவ்விடத்திற் கொண்டுசேர்த்தது. மூடன் எங்கும் சுற்றிப்பார்த்து ஆடுகள் அகப்படாமல் திரும்பிவந்த போது, சூதன், இவற்றையெல்லாம் நான்தான் கண்டுபிடித்துக் கொண்டுவந்தேனென்று நாயின் பெருமையைத் தன்மேல் ஏற்றிக்கொண்டான். நான் கொண்டுவந்தேனென்றுசொல்ல நாய்க்கு வாயில்லையே!

அன்று ராத்திரி அவர்கள் சாப்பாட்டுக்கு உட்காந்தபோது மூடன், ஐயா, இந்த வேலையும் நான் நினைத்திருந்தபடி அவ்வளவு சுலபமானதல்ல; இதைவிட நல்லவேலையாய் நமக்கு ஒன்றும் அகப்படாதா எனக்கேட்டுச் சூதன், நீ பிச்சையெடுக்க மாட்டுவாயா? பிச்சையெடுப்பது மிகவும் சுலபமாயும் லாபகரமாயும் இருக்கிற வேலை. நடந்துபோய் வாயைத் திறந்து கேட்பது தவிர அதில் வேறொரு வருத்தமுமில்லை. நம் இஷ்டப்படியே நடந்துபோகலாம்; ஓடவேண்டுவதில்லை. அந்தவேலைக்கு யஜமானனும் கிடையாது; ஒவ்வொரு வீட்டிலும் ஒரேபாட்டையே பாடிக் கொண்டு போகலாம். நன்றாய்க் கம்பீரமாக நீ தெருப்புறத்திலே போய்ப் பிச்சையெடு; நான் கொல்லைப்புறமாய்ப் போகிறேன் என்றான்.

மூடன் மிகவும் சந்தோஷமாய் அதை அங்கீகரித்து அப்படியே பிச்சையெடுக்கப்போனான். அவன் வயிற்றுக்குச் சோறில்

லாமல் மிகவும் விகாரவடிவமாயிருந்ததனால் ஈவிரக்கமுள்ள சிலர் மட்டும் அவனுக்கு இரண்டொருகாசு கொடுத்துப்போகச் சொன்னார்கள். கொல்லைப்புறமாய்ப் போன சூதனோ, ஒருவருமில்லாத தருணம்பார்த்து கோழியோ வாத்தோ காயோ கறியோ அகப்பட்டவரையில் திருடிக்கொண்டு மூடனண்டைவந்து, இதோ பார், எனக்கு எப்படிப்பட்ட பொருள்களெல்லாம் கிடைத்தன; நீ இரண்டொரு காசுதானே கொண்டுவந்தாய் என்று சொன்னான்.

அதைக்கேட்டு மூடன் மறுநாள், தோழனே! நான் இன்றைய தினம் கொல்லைப்புறத்திற்குப் போகிறேனென, அதற்குத் திருடனும் சம்மதிக்கவே, அன்றையதினம் அப்படியே போனார்கள். மூடன், கொல்லைப்புறமாய்ப் போனபோது அங்கிருந்த வீட்டுக்காரி ஒருத்தி அவனைப்பார்த்து, இங்கு ஒன்றுமில்லைபோவென்று திட்டித் துரத்திவிட்டாள். தெருப்புறமாய்ப்போன சூதன், அங்கொரு வீட்டுக்காரி புறக்கடைப்பக்கமாய்ப்போன தருணம்பார்த்து, தெருப்புறத்துச் சாளரத்தின்வழியாய் உள்ளே வைத்திருந்த சிறந்த பணியாரங்களை இழுத்துக்கொண்டு போய்விட்டான்.

அவர்கள் இருவரும் மறுபடியும் ஒன்றாய்க் கூடினபோது தன் துரதிர்ஷ்டத்திற்காக மூடன் மிகவும் விசனப்பட்டான். சூதனோ, நீ நாள்தோறும் ஒன்றும் தேடிக்கொள்ளாமல் தடிபோல் வந்து நிற்கிறது, இருவர்க்கும் நானே சம்பாதித்துக்கொண்டுவருகிறதா? இதோபார்; இன்றையதினம் எனக்கு எப்படிப்பட்ட பொருள்களெல்லாம் கிடைத்தன! நீ வேண்டுமளவு திட்டுமாத்திரம் கேட்டுக்கொண்டுவந்தாயே என்றுசொல்லி அவனுக்கு இரண்டொரு துணுக்கை கொடுத்துவிட்டு மற்றதையெல்லாம் தானே ஒருவனாய்த் தின்றான்.

மறுதடவை மூடன் தெருப்புறத்தில் இரக்கப்போய் ஒன்றும் அகப்படாமல் வெறுங்கையோடு வந்துசேர்ந்தான். சூதன் கொல்லைப்புறமாய்ப்போய் ஒரு வாத்தும் சில பழங்களும் திருடிக்கொண்டுவந்து மூடனைப்பார்த்து, அடா, நீ சோம்பேறியாயே ஒன்றும் சம்பாதித்துக்கொண்டுவராமல் நான் கொண்டுவருவதையே பங்கிட்டுத் தின்னலாமென்று பார்க்கிறாயோ? அது மாளாது; இந்த வாத்தையும் பழத்தையும் நான் உனக்குக் கொடேன்; உன் வயிற்றுக்கு நீ தேடிக்கொள் என்றுசொல்லி அவனைத் துரத்திவிட்டுத் தானே தனியாகத் தின்ன ஆரம்பித்தான்.

சிலநிமிஷங்களுக்குப்பிறகு தான் வாத்து திருடிக்கொண்டுவந்த வீட்டில் ஏதோ கொஞ்சம் கூச்சலாயிருக்கக்கண்டு, வாத்து காணாமற்போனது அவர்களுக்குத் தெரிந்துபோயிற்றென்றும், அவர்கள் அந்தத் திருடனைத் தேடிக்கொண்டுவருகிறார்களென்றும் அறிந்து, உடனே வாத்தைத் தூக்கிக்கொண்டு தன் தோழனை மூடனண்டைக்கு ஓடிச் சீக்கிரமே அந்த வாத்தை அவன் கை

யிற்கொடுத்து, என் நேசனே, நான் தெரியாமையால் உன்னைக் கொஞ்சம் கடிந்துபேசினேன்; அதைப்பற்றி எனக்கே இப்போது மிகவும் அனுதாபமாயிருக்கிறது. நான் செய்த குற்றத்திற்காக இந்த வாத்து உன்னுடையதாகவே இருக்கட்டும். கொஞ்சநேரம் வாய்க்கினிப்பாய்த் தின்னப் பழங்களுந் தருகிறேன்; நாம் இருவரும் சுகதுக்கங்களுக்குப் பாத்தியஸ்தர்களல்லவா? இங்கேயே இப்பழங்களைத் தின்றுகொண்டிரு, நாம் இருவரும் சந்தோஷமாய்க் குடிக்கும்படி எங்கேயாவது இரண்டு மூன்று புட்டி சாராயம் தேடிக்கொண்டு ஓடிவருகிறேனென்று சொல்லிக் காற்றாய்ப்பறந்து ஓடிப்போய்விட்டான்.

இரண்டொரு நாழிகைக்குள் வாத்தை இழந்துபோனவர்கள் முழுதும் தேடிக்கொண்டுவருகையில் வழியோரத்தில் அந்த மூடன் பக்கத்தில் வாத்தை வைத்துக்கொண்டு பழந் தின்றுகொண்டிருக்கக்கண்டார்கள். அவர்கள் அவனைப் பிடித்து நியாயஸ்தலத்திற்குக் கொண்டுபோய் விசாரிக்க, மூடன் தன் கதையை வேண்டியமட்டும் சொன்னான்; அது சிறிதும் பயன்படவில்லை. அப்போது அண்டைவீட்டுக்காரன் ஒருவன் வந்து, இந்த மனிதன் நேற்று என் வீட்டுக்குக்கூடப் பிச்சையெடுக்கவந்தான்; அப்போது என் வீட்டிலும் சில பொருள் கொள்ளைபோயிற்றென்று சாக்ஷிசொன்னான். இது என் தோழன் என் கையில் கொடுத்துப் போனதென்று அவன் எவ்வளவு சத்தியம்பண்ணிச்சொல்லியும் அதைக் கேளாமல் அவனைப் பிடித்துக்கொண்டுபோய்ச் சவுக்கடியடித்துத் தொழுவில் மாட்டிவிட்டார்கள்.

அந்தப் பெருந்திருடனான சூதன் அன்று பகற்பொழுதெல்லாம் எங்கேயோ போயிருந்து, பொழுதுபோகிறதருணத்தில் திரும்பி வந்து, அங்கே ஓரிடத்தில் மூடன் திருட்டுக்காகத் தண்டனை அனுபவித்துக்கொண்டிருக்கக்கண்டு அவனண்டையோடி, நேசனே, இதென்ன இது! உனக்கேன் இப்படிப்பட்ட விதி நேர்ந்ததப்பா! நல்லது ஆகட்டும்; இந்த நியாயாதிபதி லஞ்சத்துக்குச் சுவாதீனமானவனென்று எனக்குக் கேள்வி; என் சொக்காய் பாகை முதலிய எனக்குள்ள பொருள் எல்லாவற்றையும் நான் உடனே கொதுவை வைத்துப் பணம்வாங்கவேண்டும்; உன் கையிலும் ஏதாவது சொத்து இருந்தால் கொடு; மிகுத்திவைப்பதற்கு இது தருணமல்லவென்று சொன்னான்.

அதைக் கேட்ட மூடன், இன்னும் அவனுடைய சூதுதெரியாமல் அவன் சொல்வது உண்மைதானென்று எண்ணி, தன் அரைத்துணி சொக்காய் பாகை பாதரக்ஷை முதலிய எல்லாவற்றையும் அவன் கையில் கொடுத்துச் சீக்கிரமே அந்தக் காரியத்தை நிறைவேற்றிக்கொண்டு வரச்சொன்னான்.

இப்படியாகச் சூதன் தான் மூடனிடத்தினின்றும் கிரகிக்கக் கூடிய யாவற்றையும் சூதாய்க் கிரகித்துக்கொண்டு, அரையில் ஒரு கந்தைகூட இல்லாமல் அவனைத் தொழுவில் மாட்டினபடியே விட்டுவிட்டு ஓடிப்போயினான்.

எல்லாச் செய்தியையும் பூரணமாய்ச் சொல்லக்கேட்கவேண்டுமென்று விரும்புகிற நல்ல பிள்ளைகளுக்குக் கடைசியாய் ஒரு வார்த்தை சொல்லுகிறோம். அந்தச் சூதன் மறுபடி அவ்வழி திரும்பவேயில்லை; அந்தப் பேதையின் பொருளையும் தானே அநுபவித்துக்கொண்டிருந்தான். சுயபுத்தியில்லாத அம்மூடன் பட்டபாட்டைக்கூட நாம் இங்கு வாய்விட்டுச் சொல்லவேண்டுமா? திருட்டுப்புத்தியுள்ள சூதர்களோடு கூட்டுறவு பாராட்டுகிறவர்களுக்கெல்லாம் வேறென்னவிதி நேரிடும்!

## சூரியன்

சூரியனால் நமக்குண்டாகிற நன்மைகளுக்கு அளவில்லை. அது நன்றாய்ப் பிரகாசிக்கையில், அதை வெறுங்கண்ணால் பார்ப்பது கூடாது; மந்தாரப்பொழுதாயிருக்கும்போதுமட்டும் ஒருவாறு பார்க்கலாம். கறுப்புவர்ணம் பூசிய கண்ணாடியினால் அதைப் பார்த்தால் அது ஆகாயத்தில் சுடரொளிவிட்டுப் பிரகாசிக்கிற கோளமென்று புலப்படும். அது பூமிக்கு என்றைக்கும் ஒரே தூரத்தில் இராமல், சிறிதுகாலத்தில் சற்று நெருங்கியும், சிறிதுகாலத்தில் கொஞ்சம் விலகியுமிருக்கும்; ஜூலைமாதத்தில் பூமிக்குச் சமீபத்திலும், டிசம்பர்மாதத்தில் கொஞ்சம் தூரத்திலுமிருக்கும். சூரியன் பூமிக்குத் தொலைதூரத்தில் இருப்பதால், அது நமது கண்ணுக்கு அத்தனை சிறிதாகத் தோற்றுகிறது. அது பூமிக்கு அதிக தூரமாயிருக்கிற காலத்தில் 92,963,000 மயில் தூரத்திலும், அதிக சமீபத்தில் இருக்கிறகாலத்தில் 89,897,000 மயில் தூரத்திலும் இருக்கிறதாகையால், அது சராசரி பூமிக்கு 91,430,000 மயில் தூரத்திலுள்ளது. சூரியனை ஒரு முனையிலிருந்து மறுமுனைவரைக்கும் நேரே மைய அளவாக அளந்தால் அதன் விட்டம் சுமார் 852,900 மயில் நீளமிருக்கும். பூமியின் விட்டம் 79,265 மயில் தூரமாதலால் சூரியன் விட்ட அளவானது பூமியின் விட்ட அளவுக்கு 107 மடங்குக்குச் சற்று அதிகம். செக்கண்டு ஒன்றுக்கு 400 கஜம் செல்லத்தக்க பீரங்கிக்குண்டொன்றிருந்து, அது பூமியிலிருந்து ஒரேகதியாய்ச் சூரியனைநோக்கிச் செல்லுகிறதாயிருந்தால், அக்குண்டு அதனிடம்போய்ச்சேரப் பதின்மூன்று வருஷகாலஞ் செல்லுமென்று ஹெர்ஷல் என்னும் சோதிடவித்துவான் சொல்லியிருக்கிறார்.

தூரதிர்ஷ்டியந்திரம் செய்யத் தலைப்பட்டது முதற்கொண்டு சூரியமண்டலத்தை நுட்பமாய் ஆராய்ந்துபார்த்துக்கொண்டே வருகிறார்கள். அதன் மேற்பரப்பை நன்றாய்ச் சோதித்துப்பார்த்ததில், எங்கும் ஒரேவிதமாய் வெட்டவெளிச்சமாயிராமல் கன்னங்கறேலென்று கறுத்த பல புள்ளிகள் காணப்படுகின்றன. அக்கரும்புள்ளிகள் எப்பொழுதும் ஓரேவிதமாயிராமல் அப்போதைக்கப்போது மாறுகின்றன. சிலகாலங்களில் இப்புள்ளிகளேயில்லாமல் நிர்மலமாய் இருப்பதுமுண்டு. கறையிருள்போன்ற அப்புள்ளிகளைத் தூரதிருஷ்டியந்திரத்தினால் பிரதிதினமும் கருத்தாய்ப் பார்த்தறிந்த வித்துவான்கள், அவைகள் கிழக்கேயிருந்து மேற்குநோக்கி மந்தகதியாகப் பதினான்கு நாள்களுக்குள் செல்லுகின்றனவென்று கண்டறிந்திருக்கிறார்கள். அவைகள் பதினைந்தாவது தினத்தில் மீண்டும் கிழக்கே காணப்படுகின்றன. ஆனால், முன்போலிராமல் சற்று மாறுபட்டிருக்கும். அப்புள்ளிகள் இவ்வாறு ஒழுங்காய்ச் சலிப்பதினால், சூரியனும் பூமியைப்போலத் தன் இருசைச் சுற்றிவருகிறதென்று அறிந்துகொள்ளலாம். அப்படிச் சூரியன் தன்னைத்தானே ஒருதரஞ் சுற்றிவர நமது நாளின் கணக்குப்படி சுமார் 26 நாள் செல்லுகிறது. சூரியனிடத்திலுள்ள கரும்புள்ளிகளெல்லாம் ஆழ்ந்த பள்ளத்தாக்குகளாயிருக்கலாமென்று சிலர் ஊகிக்கிறார்கள். அவற்றுள் சிலவற்றின் பரப்பு மட்டும் லக்ஷக்கணக்கான சதுரமயிலுக்கு மேற்பட்டிருக்கவேண்டுமென்றும் உத்தேசிக்கிறார்கள். சூரியகிரகணம் உண்டாகிற காலங்களில் சிறந்த தூரதிருஷ்டியந்திரங்களைக்கொண்டு சூரியமண்டலத்தைப் பார்த்தால், அதைச் சுற்றிலும் அக்கினிமயமான பொன்மேகங்களெழுந்து சுடர்விட்டெரிவதுபோலச் சற்று மேடும் பள்ளமுள்ளதாக இருக்கக்காணலாம்.

சூரியனுடைய கிரணங்களிலுள்ள பதார்த்தங்களைப் பகுத்தறிவதினால், பிராணவாயு, உப்புவாயு, காந்தமுதலிய பல பொருள்களால் சூரியமண்டலம் சிர்ஷ்டிக்கப்பட்டிருக்கிறதென்று சிலர் உத்தேசிப்பதுமுண்டு. சூரியமண்டலத்திலிருந்து அபரிமிதமான வெளிச்சமும் உஷ்ணமும் இடைவிடாமல் அதைச் சுற்றி எங்கும் சென்றுகொண்டேயிருக்கிறது. நாம் வசிக்கிற இந்தப் பூமியானது சூரியனிலும் இருநூறுகோடியில் ஒருபங்குக்குஞ் சற்றுச் சிறியதாயிருப்பதினாலும், அதற்கு அநேகங் காதவழிதூரத்திற்கப்பாலிருப்பதினாலும் சூரியவெளிச்சமும் உஷ்ணமும் அத்தனையாகவில்லாமல், அவற்றின் இருநூறுகோடியில் ஒரு பங்குக்குஞ் சற்றுத் தாழ்வாகவே ஒளிமழுங்கி உஷ்ணங் குறைந்துபோகிறது. சூரியனிடத்திலுள்ள வெளிச்சமும், உஷ்ணமும் இருநூறுகோடி மடங்கு குறையாமல் அப்படியே பூமிக்கு வருமாயின் பூமி தாங்க மாட்டாது. இந்த வெளிச்சத்துக்கும் உஷ்ணத்துக்கும் எற்றவண்

ணமாகவே இவ்வுலகத்திலுள்ள படைப்புகள் பலவும் படைக்கப்பட்டிருக்கின்றன. இவ்வாறாகச் சூரியனுக்குப் பூமிமுதலிய கிரகங்களுக்கு வெளிச்சத்தையும் உஷ்ணத்தையும் கொடுக்குந்திறமிருப்பதுமன்றி, அவற்றை எல்லாம் விழவொட்டாமல் இருக்கும்படிச் செய்கிற ஆகர்ஷண சக்தியும் அதற்குண்டு. ஒரு இரும்புத்துண்டைக் காந்தத்திற்கு எதிரேபிடித்தால், அவற்றிற்கிடையில் கண்ணுக்குப் புலப்படத்தக்க தடையொன்றும் இல்லையென்றாலும், அவ்விரும்புத்துண்டை எவ்வாறு இழுத்துக்கொள்ளுகிறதோ அவ்வண்ணமே பூமியை இழுத்துக்கொள்ளுகிற காந்தக்கவர்ச்சி சூரியனுக்கு உண்டு. இரும்புத்துண்டு காந்தத்திற்குச் செல்லுகிற கவர்ச்சிக்குக் காந்தக்கவர்ச்சியென்றும், காந்தமில்லாதபட்சத்தில் அவ்விரும்புத்துண்டு பூமியை நோக்கிச்செல்லுகிற கவர்ச்சிக்கு இழுப்புக்கவர்ச்சியென்றும் பெயர். வடதென் துருவங்களைவிடப் பூமத்தியில் இழுப்புக்கவர்ச்சி அதிகமாதலால், ஒரு பொருளை நிறுத்துப்பார்த்தால் அதன் எடை பூமத்தியில் அதிகமாகவும், துருவங்களில் குறைந்தும், துருவங்களுக்கும் நிரட்சத்துக்கும் இடையிலுள்ள விடங்களில் அவ்வவற்றின் அக்ஷாம்சத்துக்குத் தக்கவண்ணம் போகப்போகக் குறைவுபட்டுமிருக்கிறதைக் கண்டறிந்துகொள்ளலாம். லந்தன் நகரத்தில் ஒரு மணங்கு நிறைகொண்ட பொருளொன்றை நிரக்ஷரேகையண்டை துலையில் தூக்கிப்பார்த்தால் அதிகமாகவும், துருவங்களில் குறைந்துமேயிருக்கும். இழுப்புக்கவர்ச்சியில்லாத இடமொன்றிருந்து, அங்கே அப்பொருளைக்கொண்டுபோய் நிறுத்துப்பார்த்தால் எடையும் இராது, பொருளும் அப்படியேதான் இருக்கும்.

இழுப்புக்கவர்ச்சி பூமிக்குமட்டுமல்ல, வஸ்துக்கள் எல்லாவற்றிற்கும் அவ்வவற்றின் பெருமை சிறுமைக்கேற்றபடியுண்டாதலால் பெரிதானவை சிறிதானவற்றை ஆகர்ஷிப்பது இயற்கையே. கிரகங்கள் எல்லாவற்றையும்விடச் சூரியன் மிகப்பெரிது. இந்நாளளவும் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிற கிரகங்கள் 182. இவற்றுள், புதன், சுக்கிரன், பூமி, அங்காரகன், வியாழன், சனி, நெப்தூன், ஹெர்ஷெல் முதலியவை பிரதானமானவை. கிரகங்களெல்லாம் ககனமார்க்கமாய்ச் சூரியனைச்சுற்றி ஓடிக்கொண்டே வருகின்றன. சூரியனுக்கும் பூமிக்கும் இடையிலுள்ள பிரதான கிரகங்கள் புதன, சுக்கிரன் இவை இரண்டுமே. மற்றவைகள் பூமிக்கு அப்பாலுள்ளவை. புதன், சுக்கிரன் இவ்விரண்டு கிரகங்களிலும் சூரியவெளிச்சமும் உஷ்ணமும் வெகு அதிகமாயிருக்கும். நமது பூமிக்கு அப்பாலுள்ள கிரகங்களில் சூரியஒளியும் வெப்பமும் பூமியிலுள்ளதைவிட அநேகமடங்கு மட்டுப்பட்டிருக்கும். நமது நாட்கணக்கின்படி, புதன் 88 நாளிலும், சுக்கிரன் 225 நாளிலும், பூமி 365¼ நாளிலும், செவ்வாய் 687 நாளிலும், வியாழன்

## சிறுவர்க்கான கதை.

### இரண்டு சகோதரர்கள் (தொடர்ச்சி.)

அந்த வேடன் ராஜகுமாரத்தியைக் கோயிலில் விட்டுப் பூட்டிய கொஞ்சநேரத்துக்கெல்லாம் நாகாசுரன் ஏழுதலையோடுகூடப் பேரிரைச்சல் இட்டுக்கொண்டு அதிவேகமாய் ஓடிவந்து வேடனைப் பார்த்து, நீ யார்? என் மலைமேல் ஏறிவந்து என்னசெய்கிறாயென்று வெருட்டிக்கேட்டான். உன்னோடுகூடப் போராடவேண்டுமென்றே வந்திருக்கிறேன் என்று வேடன் சொல்லக்கேட்டு அவன், தன் ஏழுமுகங்களாலும் தீயைக் கக்கிக்கொண்டு, அடா! எப்படிப்பட்ட சூரர்களெல்லாம் வந்து இங்கே மடிந்துபோனார்களே! நீயா என்னோடு சண்டைபோடுகிறவனென்றுசொல்லி, அவ்விடமெல்லாம் தீ பற்றிக்கொள்ளும்படியாக நெருப்பை உமிழ்ந்தான். வேடனுடைய மிருகங்கள்போய் அதை அணையாமலிருந்தால், அவன் மாண்டுபோகவேண்டுவதுதான். உடனே அவைகள் அந்த நெருப்பை அணைத்துவிட்டன. பின்பு அந்த அசுரன் வேடன்மேற் பாய வந்தான். அது கண்டு வேடன் ஒருவரும் நெருங்கவொட்டாமல் கத்திசுழற்ற, அதனால் அவ்வசுரனுடைய மூன்று தலைகள் அறுந்து போயின. தலைபோய்விடவே அசுரன் அதிக ரோஷங்கொண்டு ஆகாயத்தில் எழும்பி, வேடனைச்சுற்றிலும் நெருப்பை உமிழ்ந்துகொண்டு அவனைக் கொல்லப்பார்த்தான். வேடன் அதுகண்டு ஒருபுறமாய் எழும்பிக் கத்தியை நீட்டி அவனுடைய மற்றொரு மூன்று தலைகளை அறுத்துவிட்டான். அதனோடு அந்த அசுரன் பாதி வலிமை அடங்கிக் கீழேவிழுந்தான். மறுபடியும் அவன் எழுந்திருக்க முயல்கிற தருணம்பார்த்து வேடன் ஒரு பாய்ச்சலாய்ப் பாய்ந்து அவன் வாலைத் துண்டித்து, மேலும் அவனோடு சண்டை செய்யத் திறமில்லாமல், தன் மிருகங்களுக்குக் கட்டளையிட்டான்; அவை அவனை ஒரு நிமிஷத்தில் கிழித்துக் கொன்றுவிட்டன.

அந்தச் சண்டை முடிந்ததும் வேடன் கோயிலுக்குப்போய்க் கதவைத்திறந்து அங்கிருந்த ராஜகுமாரத்தியை வெளியே அழைத்துவந்து அந்த அதிசயத்தைக்காட்ட, அவ்வளவு நேரமும் பயந்து நடுநடுங்கிக்கொண்டிருந்த அவள் அந்தக் காட்சியைக்கண்டு சந்தோஷப்பெருக்கால் அவனைக் கட்டியணைத்துக்கொண்டு, இத்தனைநாளாய் என் தகப்பனார் கோரிக்கொண்டிருந்தபடியே நீயே எனக்கு நாயகனென்றுசொல்லி, தான் அணிந்துகொண்டிருந்த ஆரங்களைக் கழற்றி அவனுடைய மிருகங்களுக்கெல்லாம் பங்கிட்டுப் பரிசாகக் கழுத்தில் தரிப்பித்து, தன் கையிலிருந்த சிறந்த கைக்குட்டையொன்றை அவனுக்குக் காணிக்கையாகக் கொடுத்

தாள்; அவன் அந்த அசுரனுடைய ஏழு நாக்குகளையும் அறுத்து அந்தக் குட்டையில் கட்டிப் பத்திரமாக வைத்துக்கொண்டான்.

இவ்வளவானதும், அப்பேதைவேடன் சற்றே இளைப்பாறும்படி அப்பெண்ணோடுகூட அங்கேயே படுத்துக்கொண்டான். படுக்கும்போது, தான் தூங்குகையில் ஒருவரும் அவ்விடத்திற்கு வாராதபடி காத்துக்கொள்ள, சிங்கத்துக்குக் கட்டளையிட்டுப் படுத்து உடனே தூங்கிப்போனான். அவர்களைக் காத்துக்கொண்டிருந்த சிங்கமும், சண்டைசெய்து அலுத்திருந்ததனால், சமயத்தில் தன்னை எழுப்பும்படிச் சொல்லிக் கரடியைக் காவல்வைத்துத் தூங்கிப்போயிற்று. சிறிதுநேரத்தில் அந்தக் கரடியும் அலுத்துக் கோநாயைக் காவல்வைத்துப்படுக்க, கோநாயும் அப்படியே நரியைக் காவல்வைத்துவிட்டுப் படுத்தது. தனக்கும் கொஞ்சம் தூக்கம்வரவே நரி, தன்னைத் தருணத்தில் எழுப்பிவிடும்படி முசலுக்குக் கட்டளையிட்டுத் தூங்கிப்போயிற்று. இனி அந்த முசல் யாருக்குக் கட்டளையிடுகிறது! ஒன்றுமில்லை; ஆயினும் அது சிறிதுநேரத்தில் உடம்புதெரியாமல் தூங்கிப்போயிற்று. இப்படியெல்லாரும் ஒருமிக்க தூங்கிப்போனார்கள்.

இதிப்படியிருக்க, மலைமேல் என்னகாரியம் நடக்கிறதென்று பார்த்துவரும்படி அனுப்பப்பட்ட அந்தப் பட்டணத்துச் சேனபதியொருவன் சிறிதுநேரம் அம்மலையடிவாரத்தில் நின்று பார்த்துக்கொண்டிருந்து, அந்த ராஜகுமாரத்தியைத் தூக்கிக்கொண்டு நாகாசுரன் வழக்கப்படி ஆகாயத்திற் கிளம்பாமலிருக்கவே, இதென்ன அதிசயமென்று அதைப்பார்க்க மலைமேல் ஏறிப்போனான். அங்கே நாகாசுரன் செத்துக்கிடப்பதையும், அதற்குச் சமீபத்தில் ராஜகுமாரத்தியும் ஒரு வேடனும் படுத்துத் தூங்குவதையும் கண்டு துர்ப்புத்தியுடையவனாய், கத்தியையெடுத்து வேடன் கழுத்தை வெட்டிவிட்டு அந்தப் பெண்ணைக் கையிலெடுத்துக்கொண்டு போய்விட்டான். பாதிவழியில் அந்தப் பெண் விழித்துக்கொண்டு அவனைப்பார்த்துத் திகைத்துநிற்க, அவன், பெண்ணே! நீ இப்போது என் கையிலிருக்கிறாய்; அந்த அசுரனைக்கொன்றவன் நானே என்று நீ யாவரோடும் சொல்லவேண்டுமென்றான்.

அதுகேட்டு அந்தப்பெண், ஒரு வேடனும் அவனுடைய மிருகங்களும் அந்த அசுரனைக்கொன்றிருக்க, நீயென்று நான் எப்படிச் சொல்வேன்; மாட்டேனென, அவன் கத்தியையுருவிக் கையில் எடுத்துக்கொண்டு, நீ நான் சொன்னபடி செய்யமாட்டேனென்றால் இப்போதே நான் உன்னைக் கொன்றுபோடுவேனென்று சொல்லி வெருட்டவே, அவள் வேறுவிதியில்லாமல் அப்படியே அங்கீகரிக்கும்படியாயிற்று. அவள் அங்கீகரிக்கவே அந்தச் சேனுபதி சந்தோஷமாய் அவளை அழைத்துக்கொண்டு அரசனிடத்

திற்குப்போக, தன் மகள் அசுரனுக்கு இரையாய்ப்போனளென்று நினைத்து துக்கக்கடலில் ஆழ்ந்துகிடந்த அந்த அரசன் அவளை மறுபடியும் உயிரோடுபார்க்கவே உடம்புதெரியாமல் ஆனந்தக்கண்ணீர் பெருக்கிநிற்க, சேனாதிபதி தானே அவ்வசுரனைக்கொன்று அந்தப் பெண்ணை மீட்டுக்கொண்டு வந்ததாகச்சொல்லி அந்தப் பெண்ணும் ராஜ்யமும் தனக்குச் சேரவேண்டுமென்று கேட்டான். அரசன் அதைப்பற்றிப் பெண்ணைவிசாரிக்க அவள், ஆம், அவன் சொல்வது சரிதான், ஆனால் கலியாணமட்டும் ஒரு வருஷமும் ஒருநாளும்கழித்து ஆகவேண்டுமென்றாள். அவ்வளவு நாளைக்குள்ளாவது நம் பிராணநாதனை வேடனுடைய செய்தி தெரியாமற்போகிறதாவென்பது அவள்கொண்ட கருத்து.

அசுரனுடைய மலைமேல் படுத்துத் தூங்கிப்போன மிருகங்களுடைய கதையைக் கேளுங்கள்: அவை இன்னும் எழுந்திருக்கவில்லை. அப்படியிருக்கையில் பெரிய ஈ ஒன்று முசலின் மூக்கின்மேல் வந்து உட்கார்ந்துமொய்க்க ஆரம்பித்தது. அதனால் முசலின் தூக்கம் கொஞ்சம் தடைபட்டதாயினும், அது அந்த ஈயை ஓட்டிவிட்டு அப்படியே மறுபடியும் தூங்கிப்போயிற்று. அந்த ஈ அவ்வளவோடுபோகாமல் மறுபடியும் இரண்டு மூன்றுதரம்வந்து மொய்த்து அதை வருத்தவே அது விழித்துக்கொண்டுபார்த்து உடனே நரியை எழுப்பிற்று. நரி கோநாயை எழுப்ப, அப்படியே கோநாய் காடியையும் காடி சிங்கத்தையும் எழுப்பிவிட்டன. சிங்கம் விழித்துக்கொண்டு ராஜகுமாரத்தி காணமற்போனதையும், தங்கள் பிரியநாயகன் கொல்லப்பட்டிருப்பதையும் கண்டு மிகக் கோபங்கொண்டு பயங்கரமாய் ஒரு கர்ச்சனைசெய்து, இக்கொடிய காரியம்செய்தது யார்? காடி! நீயேன் என்னை எழுப்பாமற்போனாயென்று கேட்டது. அதைக்கேட்டுக் காடி நீ ஏன் என்னை எழுப்பவில்லையென்று கோநாயைக்கேட்க, அது அப்படியே நரியைக் கேட்டது. நரி முசலைக்கேட்க, அது ஒன்றும் பதில்சொல்லமாட்டாமல் நின்றது. எல்லாம் குற்றத்தை அந்த முசல்மேல் சார்த்தி அதைக் கொல்லப்போக, அது அவைகளையெல்லாம் வேண்டிக்கொண்டு, நேசர்களே! நீங்கள் என்னைக் கொல்லவேண்டாம்; நம்முடைய நாயகனைப் பிழைப்பூட்ட வழியொன்றுசொல்லுகிறேன். வெகுதூரத்துக்கப்பால் ஒரு பெரிய மலையில் எப்படிப்பட்டவர்களையும் பிழைப்பூட்டும்படியான பச்சிலைகள் இருக்கின்றன. அதைக் கொண்டுவந்தால் இவரை உடனே பிழைப்பிக்கலாமென, சிங்கம், அதிகவேகமாய் ஓடுகிறவனாதலால் நீயே புறப்பட்டுப்போய் இன்றையதினத்திற்குள் அதைக் கொண்டுவந்து சேரவேண்டுமென்றது.

அப்படியே முசல் புறப்பட்டு ஓடி அந்தப் பூண்டைப் பிடுங்கி வாயிலே கவ்விக்கொண்டு அன்றையதினமே வந்துசேர்ந்தது.

வந்ததும் சிங்கம், அறுந்துபோன வேடன்தலையை அவன் கழுத்தோடு சரியாய்ப் பொருத்திப்பிடிக்க, மூசல் அந்தப் பூண்டின் ரசத்தை அதன்மேல் தடவிற்று. உடனே வேடன் உயிர் வந்து எழுந்தான். (இன்னும் வரும்.)

## சமாசாரம்.

கேப்யுத்தம்.—ஜுலுலாந்தில் அங்கிலேயருடைய சேனாபதி, தமது பக்கத்தில் சேனாபலம் போதாதென்று அதற்காக லண்டன்நகரத்திற்கு எழுதியனுப்பியிருக்கிறார். சீக்கிரமே வேண்டிய படைகள் வந்துசேரும். என்னவந்தாலும் அத்தேசத்துக் காப்பிரிஜனங்கள் புற்றிலிருந்து ஈசல் புறப்படுவதுபோல் அளவில்லாமல் வந்துகொண்டேயிருக்கின்றன. எப்படிமுடியுமோ பார்க்கவேண்டும்!

ஆபகன்ஸ்தானத்துச் செய்தி.—தங்களுக்குக் கொடுக்கவேண்டிய சம்பளத்தைக் கொடுக்கவில்லையென்று யாகூப்கானுடைய வீரர்களே அத்தேசத்தில் வீடுபுகுந்து கொள்ளையடிக்கத் தொடங்கியிருப்பதுமன்றி, அதே காரணத்தால் சிப்பாய்கள் அவனையே நாலாமூலையிலும் எதிர்க்கப் புகுந்திருக்கிறார்கள். யானைக்குப் புல்போடுவதுபோல் இபபோது அவர் அந்த ஜனங்களுக்குச் சம்பளம்கொடுத்துவருகிறார். இப்படியிருக்க அவர் அங்கிலேயனை எதிர்ப்பது எப்படி? சீக்கிரத்தில் ஒருவாறு சமாதானமே முடியுமென்று தோன்றுகிறது.

அநாதபிக்ஷசாலை.—சென்ற தாதுவருஷத்தில் உண்டாகிக் கடுந்தீமை செய்த பஞ்சத்தினால் பல பேதைகள் பிள்ளைகளை விற்பதையும் உணவு அகப்படாமல் தவிப்பதையுங்கண்டு கனம்பொருந்திய கார்மிகல் துரையவர்களின் பத்தினியார் கோட்டை மைதானத்தில் ஒரு கூடாரம்போட்டு உணவுகொடுத்து எண்ணிறந்த பிள்ளைகளைப் போஷித்ததைக் கண்ணாரக் கண்டோமல்லவா?

இப்போது சுதேசப்பிரபுக்கள் சிலர் அப்படிப்பட்ட தர்மசாலையொன்று, சுதேச அநாதப்பிள்ளைகளுக்கு நிலையாய் இருக்கவேண்டுமென்று அதற்காக ஒரு கூட்டங்கூடினார்கள். அதில் கனம்பொருந்திய நியாயாதிபதி முத்துசாமி ஐயர் அவர்கள், கனம்பொருந்திய கஜபதிராவு-அவர்கள் முதலான பிரபுக்கள் மலைச்சாலையில் வெங்கடகிரி ராஜாவினுடைய மாளிகையிற்கூடி அதைப்பற்றி ஆலோசித்தார்கள். அவரவருடைய ஜாதியனுஷ்டான பேதத்தைக்கண்டு அததற்கேற்றபடி வெவ்வேறாகச் சாலைகள் ஏற்படுத்துவதே நியாயமென்று பெரும்பான்மையோர் கருத்துகொண்டார்கள். வெங்கடகிரிராஜா அவர்கள் மேற்படி தருமத்துக்காகப் பதினாயிரம்ரூபாய் கொடுப்பதாகச் சம்மதித்தார். அப்படி ஒரு சாலை ஏற்படுமானால், இப்போது இத்தேசத்தில் சோற்றுக்கில்லாமல் தெருத்தெருவாய்த் திரிகிற ஜாதிபேதைகளும் அந்தச் சாலையின் சம்ரக்ஷணையிற்சேர்ந்து கைத்தொழில் முதலானதைக்கற்று ஏதோ தகுந்ததாய் ஒரு ஜீவனோபாயம் தேடிக்கொண்டு சுகப்படும்படி நேருமென்று நம்புகிறோம்.

Printed at the S. P. C. K. Press, 1879.



BANKS OF THE GANGES.

கங்காதீரம்.